**செய்தி வெளியீடு எண்: 081** **நாள்: 31.01.2019**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (31.1.2019) சென்னையில் நடைபெற்ற இந்திய குடியரசுத் தலைவர் மற்றும் தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,**

காவல் துறை மற்றும் சீருடைப் பணியாளர்களுடைய பதக்கங்கள் வழங்குகின்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

**தனது நிர்வாகத் திறமையினால்**
**தமிழ்நாட்டை அமைதிப் பூங்காவாக திகழச் செய்த**
**மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி,**

இந்த இனிய விழாவில் பங்கேற்றுள்ள

மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன்
**திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அண்ணன்
**திரு.திண்டுக்கல் சீனிவாசன் அவர்களே!**
மாண்புமிகு அமைச்சர் அண்ணன் **திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!**
மாண்புமிகு அமைச்சர் சகோதரர் **திரு.பி.தங்கமணி அவர்களே!**
மாண்புமிகு அமைச்சர் அண்ணன் **திரு.ஜெயகுமார் அவர்களே!**
மாண்புமிகு அமைச்சர் **திரு.கருப்பணன் அவர்களே!**
மாண்புமிகு அமைச்சர் **திரு.ஆர்.காமராஜ் அவர்களே!**
மாண்புமிகு அமைச்சர் **திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்களே!**
மாண்புமிகு அமைச்சர் **டாக்டர் எம்.மணிகண்டன் அவர்களே!**

நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற
மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களே!
மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே!
முன்னாள் அமைச்சர் பெருமக்களே!
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
தலைமைச் செயலாளர் மரியாதைக்குரிய
**முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே!**
உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரியாதைக்குரிய
**திரு. நிரஞ்சன் மார்டி அவர்களே!**

காவல் துறை உயர் அதிகாரிகளே!

காவலர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களே!

மரியாதைக்குரிய D.G.P. அவர்களே!

வருகை தந்திருக்கின்ற பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

பெரியோர்களே! தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களைக் காக்கும் மகத்தான பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள காவல் துறை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைத் துறை, ஊர்க்காவல் மற்றும் சமூக பாதுகாப்பு படையினரின் தீரச் செயல், தகைசால் பணி, மெச்சத் தக்க பணி, சீர்திருத்தப் பணி, சிறப்புப் பணி, சிறந்த புலனாய்வு, விரல்ரேகை அறிவியல் சீர்மிகு பணி, தொழில்நுட்ப சிறப்புப் பணி மற்றும் பொது சேவைக்கான சீர்மிகு பணி ஆகிய பணிகளில் திறம்படச் செயலாற்றியவர்களுக்கு பதக்கங்கள் வழங்கும் இந்த இனிய விழாவில் பங்கேற்றதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். **பதக்கங்களை பெற்ற அனைவருக்கும் எனது மனதார பாராட்டுதல்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.** இவர்கள் சிறப்பான முறையில் பணியாற்றி பதக்கங்கள் பெற ஊக்குவித்த இவர்களது உயர் அதிகாரிகளுக்கும், உறுதுணையாக இருந்த குடும்பத்தினருக்கும் எனது பாராட்டுதல்களையும், நல்வாழ்த்துகளையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**முதலமைச்சரின் காவலர் விருதுகளின் எண்ணிக்கையை 1500 லிருந்து 3000 ஆக உயர்த்தப்படும் என 2018–19ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதன்படி, 3,000 காவலர்களுக்கு இன்று பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.**

சட்ட ஒழுங்கு பராமரிப்பு பணியைக் காவல் துறையினர் செவ்வனே மேற்கொள்ளும் வகையில் காவல் துறையில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் முன்கூட்டியே கண்டறியப்பட்டு, அவை அவ்வப்போது நிரப்பப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு அம்மாவின் அரசால் 2017ஆம் ஆண்டில் 15 ஆயிரத்து 621 சீருடை பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 16.10.2017 அன்று என்னால் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டில் சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக 511 உதவி ஆய்வாளர்களும், 6 ஆயிரத்து 140 காவல் ஆளிநர்களும் என மொத்தம் 6 ஆயிரத்து 651 நபர்கள் சீருடைப் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தற்போது காவல் துறையில் 5 விழுக்காட்டிற்கும் குறைந்த பணியிடங்கள் மட்டுமே காலியாக உள்ளன. அவையும் கூடிய விரைவில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

காவல் துறையினரின் நலனைப் பாதுகாப்பதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியைப் பின்பற்றி வரும் இந்த அரசு, மக்களின் நலன் காக்கும் பணியில் தங்களை முழுமையாக அர்ப்பணித்து இருக்கும் தமிழக காவல் துறையினர் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் வாழ்வினை மேம்படுத்தும் நோக்கத்தோடு "**காவலர் நிறைவாழ்வு பயிற்சித் திட்டத்தை**" கடந்தாண்டு அறிவித்தது. இப்பயிற்சித் திட்டமானது, தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரிந்து வரும் அனைத்து காவல் அதிகாரிகள், காவல் ஆளிநர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கு ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைப்பதற்காக, பெங்களூருவில் அமைந்துள்ள உலகப் புகழ் பெற்ற நிம்ஹான்ஸ் என்று அழைக்கப்படும் தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சிக்காக 10 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்து, இச்சிறப்பான திட்டத்தை செவ்வனே செயல்படுத்தி வருகிறது. **இவ்வாறான முழுமை பெற்ற பயிற்சி ஒரு மாநிலத்திலுள்ள அனைத்து காவலர்கள் / அதிகாரிகள் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ஒருங்கே அளிக்கப்படுவது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் என்பதை மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இப்பயிற்சி, காவலர்களின் உடல் நலத்தையும், மனத்திண்மையையும், பணித் திறனையும் மேம்படுத்துவதற்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளதென இதுவரை பயிற்சி பெற்ற காவல் அதிகாரிகள் / ஆளினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். உதாரணமாக,

மேற்கு மண்டல காவல் துறையில் பணிபுரியும் ஒரு ஆளிநர், குடிப்பழக்கத்திற்கு ஆளாகி, குடும்பத்தையும் சரிவர கவனிக்காமல், மன அழுத்தத்திற்கு ஆளாகியிருந்தார். இப்பயிற்சியை முடித்த அவர், மனமாற்றம் ஏற்பட்டு, குடிப்பழக்கத்தை அறவே விட்டு, குடும்பத்தாருடன் நல்ல முறையில் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அதே போன்று, உடன் பிறந்தவர்களுடன் சொத்து பிரச்சனை காரணமாக சச்சரவு செய்து கொண்டு, மன அழுத்தத்துடன் இருந்த காவல் அலுவலர் ஒருவரும், இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி பெறும்போதே தனது சகோதரர்களுக்கு தகவல் தெரிவித்து, மீண்டும் அவர்களுடன் நல்லுறவினை பராமரித்து சுமூகமாக வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

காவல் ஆளிநர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் இடையே, இப்பயிற்சி பரஸ்பர நல்லுணர்வு மற்றும் பணியிடத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சிறப்பு மிக்க, பயனுள்ள இப்பயிற்சியில், இதுவரை 20,000 காவலர்களும் சுமார் 22,000 காவலர்களின் குடும்பத்தாரும் பங்கேற்றுள்ளனர் என்பதை பெருமிதத்துடன், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற வாரம் பெங்களூர் நிம்ஹான்ஸ் நிறுவனத்திற்கு வந்திருந்த இந்தியாவின் உள் துறை அமைச்சர், தமிழ்நாடு செயல்படுத்திவரும் இந்நிறைவாழ்வுத் திட்டத்தை வெகுவாக பாராட்டி, இது போன்ற திட்டத்தை மத்திய அரசின் கீழ் இயங்கும் மத்திய எல்லை பாதுகாப்பு படை மற்றும் மத்திய சேம காவல் படையினருக்கும் (CRPF) செயல்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள்.

மேலும், சென்ற ஆண்டு வரை 40 வயது முடிவடைந்த காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரை அரசாங்க மருத்துவமனைகளில் கட்டணமின்றி முழு உடல் பரிசோதனை செய்து கொள்ளலாம் என்ற உத்தரவை மாற்றி 30 வயது

முடிந்த காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரை இவ்வசதியினைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மாண்புமிகு அம்மாவின் அரசு உத்தரவிட்டுள்ளது.

இதே போன்று பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற காவல் துறையினர், சிறைத் துறையினர், தீயணைப்பு மற்றும் மீட்புப் படைத் துறையினர் மற்றும் காவல் துறையில் அமைச்சுப் பணியாளர்கள் பயன் பெறும் வகையில் குறைந்த விலையில் பொருட்கள் வழங்க மேலும் 2 காவல் அங்காடிகள் (கேன்டின்) திறக்கப்பட்டு, தமிழகமெங்கும் தற்போது 50 காவல் அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன.

அதே போன்று ஓய்வு பெற்ற காவல் துறையினரின் நலனைக் கருத்தில் கொண்டு, **"ஓய்வு பெற்ற காவல் துறையினருக்கான நல வாரியம்"** ஒன்றினை அமைக்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு போராட்டங்களை திறம்பட கையாள்வதிலும், தீமையினை விளைவிக்கும் இயக்கங்களின் முயற்சிகளை முறியடிப்பதிலும், பிரிவினைவாத இயக்கங்கள் வளராமல் முளையிலேயே கிள்ளி எறிவதிலும், இயற்கை சீற்றங்கள் மற்றும் இயற்கை பேரழிவுகளின் போது தேவையான நிவாரண பணிகளில் ஈடுபடுவதிலும், தமிழ்நாடு காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் ஊர்க்காவல் படையினர் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றனர். அதே போல் தண்டனைக்குள்ளாகி சிறையில் இருக்கும் குற்றவாளிகளை வழிநடத்துவதிலும், அவர்களது வருங்காலத்தை கருத்தில் கொண்டு அவர்களை நல்ல மனிதர்களாக மனித நேயத்தோடு மாற்றுவதிலும் தமிழ்நாடு சிறைத் துறை மிகவும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. ஊர்க்காவல் படையினர் தங்களது சொந்த அலுவல்களுக்கிடையே, காவல் பணியிலும் ஈடுபட்டு காவல் துறைக்கு சிறப்பான முறையில் வலு சேர்த்து வருகின்றனர் என்பதும் பெருமைக்குரிய ஒன்றாகும். விரல் ரேகைப் பிரிவினரும், தடய அறிவியல் பிரிவினரும், காவல் துறையின் புலன் விசாரணைக்கு முதுகெலும்பாக செயல்பட்டு, குற்றவாளிகளை கண்டுபிடிப்பதில் பெரும் உதவியாக இருந்து வருகின்றனர். தமிழக காவல் துறையின் விரல் ரேகை பிரிவினரின் சிறந்த

செயல்பாட்டினால், விரல் ரேகை தடயங்கள் மூலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள குற்ற வழக்குகளின் எண்ணிக்கையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக தொடர்ந்து இருந்து வருகிறது என்பது மிகவும் பாராட்டுதலுக்குரிய ஒன்றாகும்.

தமிழ்நாடு காவல் துறை நாட்டிலேயே சிறந்த படை என்ற பெயர் பெற்று விளங்குகிறது. **இதற்குச் சான்றாக, அண்மையில் இந்தியா டுடே பத்திரிகை, – சட்டம் ஒழுங்கில் சிறப்பாக செயல்படும் மாநிலம் – தமிழ்நாடு – என்பதற்காகவும், குறுகிய காலத்தில் இந்த சாதனை செய்ததற்காகவும் தனித்தனியாக 2 விருதுகள் வழங்கியுள்ளது. இது காவல் துறையினரான உங்களின் அயராத உழைப்பினால் மட்டுமே சாத்தியமாயிற்று என்று சொன்னால் அது மிகையாகாது.**

**கோவை ஆர்.எஸ்.புரம் காவல் நிலையம் நாட்டிலேயே சிறந்த முதல் காவல் நிலையமாகவும், சென்னை அண்ணா நகர் கே.4 காவல் நிலையம் 5வது காவல் நிலையமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டன. அது போல, சமீபத்தில், பெரியகுளம் காவல் நிலையம் நாட்டிலேயே 8வது சிறந்த காவல் நிலையமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது, ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் உங்களின் பல்வேறு செயல்பாடுகளுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.**

சமீபத்தில் நடந்து முடிந்துள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் சுமார் 3 லட்சத்து 413 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்ய உலகமெங்கும் உள்ள நிறுவனங்கள் தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பம் இட்டுள்ளனர். மாண்புமிகு அம்மா அவர்களின் தாரக மந்திரமான “**அமைதி, வளம், வளர்ச்சி**” என்ற கூற்றின்படி, இந்நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு முக்கியமான காரணம், தமிழ்நாட்டில் நிலவும் அமைதியான சட்ட ஒழுங்கு நிலை தான் என்பதை இங்கே பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இவ்வாறு சட்டம் ஒழுங்கில் அமைதியான மாநிலமாக தமிழ்நாடு உள்ளதால், வளங்கள் தேடி வந்து, மாநிலம் வளர்ச்சிப் பாதையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதையும், அதற்கு உங்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் உள்ளது என்பதையும் எண்ணி நீங்கள் பெருமை கொள்ள வேண்டும்.

காவல் துறையை நவீனப்படுத்தியும், அவர்களது திறனை மேம்படுத்தியும், அவர்களுக்கு நவீன சாதனங்கள் வழங்கியும், அவர்களது மன வலிமை மேம்பட பயிற்சிகள் வழங்கியும் வருவதால், சாதிக் கலவரங்கள், தீவிரவாதம், மதவாதம், அடிப்படைவாதம், தொழிலாளர் கிளர்ச்சி போன்றவை பெருமளவில் குறைந்துள்ளன.

குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை மேம்படுத்த தமிழ் நாடு அரசு பொது இடங்களில் சிசிடிவி கேமராக்களை பொருத்த வழிவகை செய்துள்ளது. தமிழ்நாடு அரசின் அறிவுரைகளை பின்பற்றி, பொது மக்கள் ஒத்துழைப்புடன் இது வரையில் 2 லட்சத்து 79 ஆயிரத்து 440 சிசிடிவி கேமராக்கள் தமிழ்நாடு முழுவதும் பொருத்தி குற்றங்கள் நடைபெறுவது பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இப்பணியை தொடர்ந்து செயல்படுத்தி குற்றச் செயலற்ற மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றுவதற்கு அனைத்து முயற்சிகளையும் தமிழ்நாடு காவல் துறையினர் மேற்கொள்ள வேண்டும். அம்முயற்சிகளையும், பணிகளையும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து ஊக்கப்படுத்தும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

‘‘**மக்களின் வரிப் பணத்திலிருந்து நமக்கு சம்பளம் கொடுக்கிறார்கள். ஆகவே மக்களுக்கு தொண்டு செய்கிறோம் என்பது மட்டுமல்ல, மக்கள் நமது எஜமானர்கள் என்ற வகையில் அரசு அலுவலர்களும், மற்றவர்களும் அந்தப் பணியை செய்தால் தான் நிலைமை சீர்படும், எந்தத் திட்டமும் நிறைவேறும்**’’ என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

காவல் பணி என்பது ஒரு மகத்தான பணி. சமுதாயத்தில் அநீதி இழைக்கப்பட்ட மக்கள் நியாயம் கோரிட காவல் நிலையங்களுக்கு வரும்போது, அவர்களை மனித நேயத்தோடு அணுகி, அன்போடு பேசி, அவர்களது குறைகளை கேட்டறிந்து, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி, தண்டனை பெற்றுத் தரும்போது மக்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். அதைப் பார்த்து உங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. இதனால், இந்த அரசின் மீதும், சட்டத்தின் மீதும் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுகிறது.

சீருடைப் பணியாளர்களின் கடமையுணர்வு, தியாகம் மற்றும் செயல்பாட்டினை கவுரவிக்கும் வகையில் பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. இது போன்ற நிகழ்ச்சிகள் பதக்கம் பெறுபவருக்கு ஊக்கம் அளிப்பதுடன் மற்ற பணியாளர்களும் சிறப்பாக பணிபுரிந்து, இதே போன்று பதக்கங்கள் பெற வேண்டுமென்ற உத்வேகத்தையும் அளிக்கிறது.

நீங்கள் வாழ்க்கையில் யாராக இருக்க விரும்புகிறீர்கள்? ஊர் பேர் தெரியாத பத்தோடு பதினொன்றாகவா? அல்லது சாதனையாளராகவா? ஊர் பேர் தெரியாத ஒருவராக இருக்க விரும்புகிறீர்கள் என்றால், கூட்டத்தோடு கலந்து போய் விடுவீர்கள். ஆனால், வாழ்க்கையில் சாதிப்பவராக நீங்கள் விரும்பினால், எல்லோரும் உங்களை மதிக்கும் வண்ணம் செயல்பட்டு, நிமிர்ந்து நில்லுங்கள். உங்கள் பணியை நீங்கள் சிறப்பாக செய்யுங்கள். அவ்வாறு செய்தால், இப்போது பதக்கங்கள் பெறும் சாதனையாளர்களைப் போல் உங்களுக்கான அங்கீகாரம் தானாக உங்களைத் தேடி வரும்.

காவல்துறையில் பணியாற்றும் நீங்கள் நாட்டில் ஏற்படும் குற்ற நிகழ்வுகளுக்கு, யாரும் சிந்திக்காத வகையில் மாறுபட்ட சிந்தனையோடு அதற்கு தீர்வு காண வேண்டும். இதைக் கூறும்போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு காட்டில் நிறைய யானைகள் வசித்து வந்தன. அந்த காட்டில் மழையின்மை காரணமாக யானைகளுக்கு குடிக்க நீர் கிடைக்கவில்லை. யானைக் கூட்டத் தலைவன், யானைகளை அழைத்து பக்கத்தில் எங்காவது தண்ணீர் கிடைக்கிறதா என்று பார்க்கச் சொன்னது. அதன்படி யானைகள் நீர் கிடைக்கும் இடங்களை தேடின. அப்பொழுது பக்கத்திலுள்ள காட்டில் நிறைய நீர்நிலைகள் இருப்பதாக சில யானைகள் தலைவனிடம் கூறின. உடனே எல்லா யானைகளும் அந்த காட்டை நோக்கி விரைந்தன. அந்த காட்டில் முயல்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்தன. தண்ணீர் இருக்கின்றது என்று அறிந்த யானைகள், கூட்டம் கூட்டமாக அந்த காட்டிற்குள் சென்றன. வழியில் பல முயல்கள் இதன் காலடியின் சிக்கி மடிந்தன. அந்த காட்டிலுள்ள தண்ணீரை

யானைகளின் கூட்டமே மொத்தமாக அருந்தியது. முயல்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. யானைகள் அக்கம் பக்கத்திலுள்ள யானைகளையும் அந்தக் காட்டிற்கு அழைத்து வந்தன. யானைகளின் அட்டகாசம் அந்த காட்டிலேயே தொடர்ந்தது. இதனை முடிவுக்கு கொண்டு வர முயல்கள் ஒன்று கூடி ஆலோசனை செய்தன. "நம்மால் யானைகளை தடுக்க முடியாது" என்றன சில முயல்கள். அப்பொழுது ஒரு முயல், "ஏன் முடியாது ? நான் இந்த யானைக் கூட்டம் இந்தப் பக்கம் வரவிடாமல் செய்துவிடுவேன்" என்று மனதில் ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டு கிளம்பியது.

அந்த முயல், யானைகளிடம் நேரடியாக நெருங்கினால் ஆபத்து என்பதை உணர்ந்து, சற்று உயரமான இடத்திலிருந்து பேசியது. "நான் சந்திர பகவான் அனுப்பிய தூதுவன், இன்று நான் முயலின் தோற்றத்தில் வந்துள்ளேன்" என்று கூறியது. "சந்திர பகவானின் ஆணைப்படி ஒரு செய்தியை இங்கே தெரிவிக்க வந்திருக்கிறேன்" என்று உரக்கக் கூறியது.

"என்னுடைய ஆதரவில் வாழும் முயல்கள் உங்களால் நசுங்கி இறந்திருக்கின்றன, இது மன்னிக்க முடியாத குற்றம். எனக்குச் சொந்தமான இந்த ஏரியில் நீங்கள் நீர் அருந்தக் கூடாது. எனது ஆதரவில் வசிக்கும் முயல்களுக்கு இனிமேல் எந்த தீமையும் செய்யக் கூடாது. மீறினால் உங்களுக்கு அழிவுக் காலம் வந்து விட்டது என்று அறியவும்".

"நீங்கள் ஒழுங்காக நடந்து கொண்டால், நான் நல்லவனாக இருப்பேன். இல்லையேல் உங்களை ஒழித்துக் கட்டுவதைத் தவிர வேறு வழியில்லை என சந்திர பகவான் உங்களிடம் தெரிவிக்கச் சொன்னார்" என்று கூறியது, அந்த புத்திசாலி முயல். உடனே யானைக் கூட்டம் நடுங்கியது. அந்த யானைக் கூட்டத் தலைவன், "என்னை சந்திரனிடம் கூட்டிச் செல்லுங்கள் நான் மன்னிப்பு கேட்க வேண்டும்" என்று கூறியது. உடனே அந்த முயல், "சந்திர பகவானைக் காட்டுகிறேன்", என்று கூறி, அந்த யானைக் கூட்டத் தலைவனை அழைத்துச் சென்றது.

செல்லும் வழியில் உள்ள ஒரு ஏரியில் சந்திரனின் உருவம் நன்றாக தெரிந்தது. உடனே சமயோசிதமாக அந்த முயல், ஏரியில் தெரிந்த சந்திர பிம்பத்தை யானைக்கு காட்டியது. உடனே யானை, "நான் நீராடிவிட்டு சந்திர பகவானை தரிசிக்கிறேன்" என்று கூறி தண்ணீரில் இறங்கியது. யானையின் கால் பட்டதால் தண்ணீர் கலக்கப்பட்டது. தண்ணீரில் ஏற்பட்ட கலக்கத்தினால், சந்திரனின் பிம்பம் பல உருவங்களாக தெரிந்தது.

அதைக் கண்ட முயல் சாமர்த்தியமாக யானையிடம், "நீங்கள் தண்ணீரை இப்படி தொட்டு கலக்கலாமா? அதனால் தான் சந்திர பகவானுக்கு உங்கள் மீது கோபம் வந்து விட்டது. அதனால் தான் அவரது உருவம் சிதறி காணப்பட்டது" என்றது. "அதன் விளைவை நினைத்து நான் பயப்படுகிறேன்'', என்று பயம் காட்டியது.

இதனால் பயந்து போன யானைக் கூட்டத் தலைவன், "நானும், எனது கூட்டமும் இந்த ஏரியிலே தண்ணீர் குடிக்க மாட்டோம். இந்த காட்டிலேயே இருக்க மாட்டோம்" என்று கூறி விட்டு கிளம்பியது. காட்டை விட்டு யானைக் கூட்டமும் அகன்றது.

ஒரு சிறிய முயல் தனது மாறுபட்ட சிந்தனையினால் பலம் கொண்ட யானைக் கூட்டத்தையே காட்டை விட்டு விரட்டியது. அதுபோல் நீங்களும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும், குற்றவாளிகளை கண்டுபிடிப்பதற்கும், குற்ற நிகழ்வுகளை தடுப்பதற்கும், சமயோசிதமாக மாறுபட்ட முறையில் சிந்தித்தால், எல்லாவற்றிற்கும் ஒரு நல்ல நிரந்தர தீர்வு கிடைக்கும்.

காவல் துறையில் பணிபுரியும் நீங்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போல, "**கடமை, கண்ணியம், கட்டுப்பாடு**" என்ற கோட்பாடுகளை மனதில் நிலைநிறுத்தி செயலாற்ற வேண்டும். அவ்வாறு நீங்கள் நேர்மையுடனும், தனித்துவத்துடனும் பணியாற்றினால், உங்கள் பணிக் காலங்களில் நீங்கள் மேன்மேலும் பல சிறப்புகளைப் பெற முடியும் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பதக்கங்கள் பெற்ற அனைத்து சீருடை பணியாளர்களுக்கும் மீண்டும் ஒரு முறை எனது வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஸ்ரீ** அபிநவ், ஐ.பி.எஸ் தலைமையிலான மிடுக்கான அணிவகுப்பு நடத்திய நமது காவல் துறை வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த விழாவை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைவருக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**